## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi*
## *CC.No.98/2017 – P.W. 8 (LW11)*

| | |
|---|---|
| *Name* | சங்கரன் காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 58 |

*A1, A3* **எதிரிகள் ஆஜர். A2 எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 23.06.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் களப்பால் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன்.

கடந்த 26.03.2015 ம் தேதியன்று மன்னார்குடி நகர காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது இரவு 20.00 மணியளவில் மன்னார்குடி பெரிய கம்மாளதெருவில் வசிக்கும் செல்லமுத்து மகன் சிவக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.238/2015 ச/பி. 380 இதச வழக்கு பதிவு செய்து விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசா.ஆ-5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திற்கு அடுத்தக்கட்டிடம் தான் நீதிமன்றம் என்றால் சரிதான். இந்த வழக்கினுடைய புகார், முதல் தகவல் அறிக்கை 14 மணி நேரம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு வந்தடைந்தற்கு ஏதேனும் சிறப்பு காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் பெற்ற புகாரில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இடத்திற்கு மறுநாள்

இரவு 08.30 மணிக்கு சம்பவ இடத்தை பார்த்து விசாரித்ததாகவும் அசா.1 என்னிடம் கொடுத்த புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நடந்ததாக சொல்லக்கூடிய சம்பவம் தொடர்பாகமன்னார்குடி நகர போலீசாரை தொடர்புகொண்டு கூறினேன் என்றும், வெண்ணைதாழி திருவிழாவில் பாதுகாப்பு பணியில் இருப்பதாக கூறியதாகவும் புகாரில் கூறவில்லை என்றால் சரிதான்.

சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த வழக்கு புகார் பெறப்படவில்லை என்றும், பின்யோசனையிட்டு உருவாக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I.
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.98/2017 – P.W. 9 (LW12)***

| | |
|---|---|
| *Name* | கழனியப்பன் காவல் ஆய்வாளர்<br>நீடாமங்கலம் காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *58* |

*A1, A3* **எதிரிகள் ஆஜர். A2 எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 23.06.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

நான் நீடாமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 25.03.2015 ம் தேதியன்று நான் மன்னார்குடி நகர வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்று இரவு 08.15 மணிக்கு சிவக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று மன்னார்குடி நகர காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சங்கரன் என்பவர் நிலைய குற்ற எண்.235/2015 ச/பி. 380 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் சந்தானமேரி அவர்கள் 26.03.2015 ம் தேதியன்று 21.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பக்கிரி மற்றும் வடுகநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். மேற்படி பார்வை மகசர் ஏற்கெனவே அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **மேற்படி மாதிரி வரைபடம் அசா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சிகள் சிவக்குமார்,

செல்லமுத்து, மோகன், கோபி, நரேந்திரன், வடுகநாதன் மற்றும் பக்கிரி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

அதன்பிறகு வழக்கை ஆய்வாளராகிய நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து மன்னார்குடி நகர காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குணசேகரன் என்பவரை அனுப்பி எதிரிகளை தேடி வர அறிவுறத்தப்பட்டது. சிறப்பு உதவி ஆய்வாளர் ஈரோடு நகர காவல் நிலையம் மற்றும் பவானி காவல் நிலையம், மலையம்பாளையம் காவல் நிலையத்திற்கு சென்று எதிரிகள் புகைப்படத்தை காண்பித்து தேடினோம். (**எதிரி வழக்கறிஞர் மேற்படி சங்கதிகள் புதுமையானது தற்போது சொல்லப்படுகிறது என்று ஆட்சபனை தெரிவித்தார். நீதிமன்றம், வழக்கு கோப்புகளை (CD) பார்வையிட்டதில் மேற்படி சங்கதிகள் வழக்கு கோப்பில் குறிப்பிடப்பட்டியிருந்ததை நீதிமன்றம் கவனித்தது.**) வழக்கு விசாரணையின் போது இவ்வழக்கின் வாதி சிவக்குமார் அவரது நகைக்கடையில் நகை திருடிய புகைப்படத்தை CD ஆக தயார் செய்து விசாரணையின் போது என்னிடம் ஒப்படைத்தார். **மேற்படி கடையின் CCTV footage அடங்கிய CD அசா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). **மேற்படி CD ன் 65b சான்றிதழ் அசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண்.235/2015 சம்பந்தப்பட்ட எதிரி கிருஷ்ணவேனி என்பவர் திருவண்ணாமலை நகர குற்ற பிரிவு காவல் நிலைய குற்ற எண்.83/2015 ச/பி.451, 380 இதச வழக்கில் 22.08.2015 ம் தேதியில் திருவண்ணாமலை நகர போலீசார் கைது செய்து வேலூர் மாவட்டம், துரைப்பாடி மகளிர் சிறையில் நீதிமன்ற காவலில் இருந்தவரை PT warrant ல் பெற்று ஆஜர் செய்ய மன்னார்குடி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தோம். 31.08.2015 ம் தேதியில் 14.00 மணிக்கு Formal arrest செய்தும், PT warrant எடுத்து வந்து நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அவரை போலீஸ் காவலுக்கு எடுத்து அவர் மன்னார்குடியில் திருடிய 15 1/2 பவுன் எடைக்கொண்ட நகைகளை மன்னார்குடி தாலுக்கா உதவி ஆய்வாளர் திரு. ஆனந்தகிருஷ்ணன் என்பவரை திருவண்ணாமலை அனுப்பி தடயச்சொத்துக்களை பெற்று வர அனுப்பி வைக்கப்பட்டு அதன்படி 03.09.2015 ம் தேதி என்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்ததை நான் அவரிடம் இருந்து

கைபற்றுதல் மகசரில் பெற்று எதிரியை சாட்சிகள் நடராஜன் மற்றும் குமார் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **"நகைகளை வக்கீல் வசிகரன் மூலமாக மன்னார்குடி போலீசாரிடமும் திருவண்ணாமலை போலீசாரிடமும் கொடுக்க சொல்லிவிட்டதாக சொன்னோம்" என்ற பகுதி மட்டும் அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (Discovery இல்லாததால் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் 1) 2 பவுன் எடையுள்ள பவுன் செயின்கள் நான்கு, மொத்தம் 8 பவுன்கள், 2) 1 பவுன் எடையுள்ள பவுன் செயின் நான்கு மட்டும் மொத்தம் 4 பவுன்கள் 3) 1 1/2 பவுன் எடையுள்ள கைசெயின் இரண்டு மட்டும் மொத்தம் 3 பவுன்கள், 4) 1/2 பவுன் செயின் ஒன்று மட்டும், மொத்தம் 15 1/2 பவுன்களை மகசரில் கைப்பற்றினேன். **மேற்படி கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

இவ்வழக்கின் மற்றொரு எதிரியான அலமேலு என்பவர் திருவண்ணாமலை நகர குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண்.83/2015 ச/பி. 451, 380 இதச வழக்கில் 22.08.2015 ம் தேதியன்று கைது செய்து வேலூர் துரைப்பாடி மகளிர் சிறையில் இருந்தவரை PT warrant மூலம் மன்னார்குடி நகர காவல் நிலைய வழக்கில் ஆஜர்படுத்த வேண்டி தபால் கொடுத்தும், உத்தரவு பெற்று 05.10.2015 ம் தேதி 17.10 மணிக்கு Formal arrest செய்தும், 06.10.2015 ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அடைப்பு காவலுக்கு உட்படுத்தி துரைப்பாடி மகளிர் சிறையில் அடைக்கப்பட்டது. இவ்வழக்கின் சாட்சிகள் நடராஜன், குமார், ஆனந்தகிருஷ்ணன், சிவக்குமார் மறுவாக்குமூலம் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் தடயச்சொத்துகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்து சிபி எண்.182/2015. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு எதிரியான செல்வி என்பவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்ததால் அவரை பல இடங்களில் தேடியும் கைது செய்ய முடியாததால் அவரை தலைமறைவு எதிரியாக பாவித்து 18.11.2015 ம் தேதியன்று இவ்வழக்கின் எதிரிகள் மீது ச/பி.380 இதச படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அசா.பொ.2 மற்றும் அசா.ஆ.7 ஆவணங்கள் என்னால் இன்று தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தவறுதலாக வழக்கு கோப்பிலேயே இருந்து விட்டது. இன்று தான் தாக்கல் செய்கிறேன். அசா.ஆ.7 ஆவணத்தில் நிறைய அடித்தல் திருத்தல் உள்ளது என்றாலும், சுருக்கொப்பம் இல்லை என்றாலும் சரிதான். 65b ஆவணத்தை யார் தாக்கல் செய்தது என்றால் பாஸ்கரன் என்பவரிடம் பெறப்பட்டு நான் தாக்கல் செய்தேன். பாஸ்கரன் என்பவர் யார் என்றால் CD களை copy பன்னி தரும் Technician ஆவார். பாஸ்கரன் எனபவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அவர் சாட்சியாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று சாட்சி சொல்லுகிறார். அதில் மொத்தம் எத்தனை file கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி CD ஐ எந்த வகையில் copy செய்தார் என்ற வகையில் எனது விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். CCTV தரவுகளை பொறுத்த வகையில் DVR பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அவ்வாறு இருக்கையில் அதன் தொடர்பான விபரங்களை சேகரிக்கப்பட்டியிருக்கும் என்றால் CCTV கேமராவில் உள்ள தரவுகளை பதிவிறக்கம் செய்து CD ஆகவும், pendrive ஆகவும் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார். அவ்வாறு இருக்கையில் Pendrive நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

அசா.ஆ-7 ஆவணம் எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் ஆமாம். அசா.ஆ.7 ஆவணம் சட்டம் சொல்லும் வகையில் 2 Annexure உடன் கூடிய வடிவில் இல்லை என்றால் சரியல்ல. இந்த தரவுகள் original source ல் இருந்து தான் எடுக்கப்பட்டது தொடர்பாக எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல. ஒரு moniter ல் play ஆக கூடிய ஒரு விவரத்தை தனியாக புகைப்படம் மூலம் எடுப்பது என்பதும், original source ல் இருந்து capture செய்வது வெவ்வேறானவை என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஆனால் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அந்த CD ல் moniter ல் play ஆக கூடிய விபரத்தை வேறோரு சாதனம் மூலம் போட்டோ எடுத்தது போல் உள்ளது என்றால் சரியல்ல.

கைப்பற்றப்பட்ட தாக சொல்லும் நகைகளும், திருடப்பட்டதாக சொல்லும் நகைகளும் ஒன்று என்பதை உறுதிசெய்யும் வகையில் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் புகார்தாரர் மறுவிசாரணையில் நகையை அடையாளம் காட்டி

உறுதி செய்துள்ளார். அசா.1னுடைய கடையில் ஹால்மார்க் தொடர்புடைய எண்ணோ, purchase bill அல்லது Stock Register தொடர்புடைய ஆவணத்தை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. அது வழக்கிற்கு தேவையில்லை என்பதால் நான் பார்வையிடவில்லை. இந்த வழக்கில் சாட்சியாக உள்ள நபர்கள் அனைவரும் அசா.1ன் நண்பர்கள் என்றால் இல்லை. தெருக்காரர்கள். இந்த வழக்கு தொடர்பாக அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தப்படவில்லை என்றால் ஆமாம். CCTV ஆய்வு எதிரிகள் தெளிவாக இருப்பதால் அதற்கென தனியாக அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை.

6 மாதம் கழித்து ஒரு நபரை மட்டும் காட்டியதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அதற்கு சட்டவலிமை இல்லை என்றால் சரியல்ல. எனது விசாரணைப்படி மோகன், கோபி ஆகியோர் சம்பவ நேரத்தில் எதிரிகளை பார்த்ததாக இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லக்கூடிய நகைகள் வக்கீல் வசீகரனிடம் இருந்து பெற்றதாக சொல்லும் நிலையில் அது தொடர்புடைய ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் மகசரில் சொல்லப்பட்டுள்ளது. வசீகரன் இந்த வழக்கில் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லக்கூடிய நகைகளை ஆனந்தகிருஷ்ணன் என்ற உதவி ஆய்வாளர் என்றால் சரிதான்.

அவ்வாறு இருக்கையில் ஆனந்தகிருஷ்ணன் மேற்படி இந்த வழககின் தடயத்தை பெற்று வந்ததாக சொல்லும் நிலையில் படிவம் 91 அல்லது மகசர் மூலமோ பெற்று வரவில்லை என்றால் சரிதான். குணசேகரன் என்ற சிறப்பு உதவி ஆய்வாளர் இந்த வழக்கு விசாரணை தொடர்பாக நான் பணித்ததாக சொல்லும் நிலையில் அவரை இந்த வழக்கின் சாட்சயாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அவர் இந்த வழக்கை பொறுத்தமட்டில் எதிரிகளை தேடி சென்றார். எதிரிகளையோ, வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்பதால் அவரை சாட்சியாக விசாரிக்கவில்லை. உண்மையில் அவ்வாறு இருந்திருந்தால் அவரை சாட்சயாக விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் DVR ஐ கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கை பொறுத்து 1 வது எதிரியினுடைய ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் தடயச்சொத்து (அசா.பொ.1 ) கைப்பற்றப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 1 வது எதிரியை நீதிமன்றத்தில் அனுமதி பெற்று அதனடிப்படையில் தான் விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரிதான். இந்த

வழக்கினுடைய எதிரியை ஒப்புதல் வாக்குமூலம் என்னால் 03.09.2015 ம் தேதி காலை 10.00 மணிக்கு பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 1 1/2 மணிநேரம். (அன்றையதினம் காலை 11.30 மணி இருக்கும்). இந்த வழக்கில் அசா.ஆ.3 மற்றும் 4 ஆவணம் ஆகியவை மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 14 மணி நேரம் கால தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதற்கு ஏதேனும் சிறப்பு காரணமும் இல்லை என்றால் இல்லை.

அசா.1 எங்களுடைய விசாரணையில் நடந்ததாக சொல்லக்கூடிய சம்பவ தினத்தின் போது மன்னார்குடி போலீசாரை தொடர்புகொண்டு சொன்னதாகவும், வெண்ணைதாழி பாதுகாப்பு பணியில் இருப்பதாக கூறியதாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். விசாரணையின் போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சங்கரன் சிறப்பு உதவி ஆய்வாளரிடம் சிசிடிவி தரவுகளை புகாருடன் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். புகாரில் மேற்படி விபரங்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நடந்ததாக சொல்லக்கூடிய சம்பவதினதிற்கு மறுநாள் இரவு 08.30 மணிக்கு நடந்ததாக சொல்லக்கூடிய சம்பவ இடத்திற்கு சென்றதாக ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். இரவு 09.30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டததாக உள்ளது.

நடந்ததாக சொல்லப்படும் மறுநாள் இரவு 08.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், அசா.1ஐ விசாரித்ததாகவும் அவரது கடையிலேயே வைத்து கொடுக்கப்பட்ட புகாரை மோகன் மற்றும் கோபி ஆகியோர் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தார்கள் என்று என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மோகன் என்பவருடைய கடையில் இருந்து சிசிடிவி தரவுகளை கைப்பற்றவில்லை என்றால் கைப்பற்றவில்லை. பார்வையிட்டேன். எனது விசாரணையில் அசா.2 மோகன் ஒள்ளியான , உயரம் குறைவான பெண் நகையை எடுத்து சென்றதாக விசாரணையில் சொல்லவிலலை என்றால் சரிதான்.

சாட்சி ஆனந்தகிருஷ்ணன் 03.09.2015 ம் தேதி மாலை 03.00 மணிக்கு வழக்கு தடயச்சொத்தை என்வசம் ஒப்படைத்ததாக எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் 12.00 மணிக்கு ஒப்படைத்ததாக சொல்லியுள்ளார். எனது விசாரணையில் ஆனந்தகிருஷ்ணன் 02.09.2015 ம் தேதி திருப்பத்தூர் சென்று

வழக்கறிஞர் வசீகரனை தொடர்புகொள்ள முயற்சித்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் இல்லை என்றாலும், வழக்கிற்கு ஏற்றாற்போல் பின்யோசனையிட்டு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் தான் ஆவணங்கள் உடனுக்குடன் நீதிமன்றத்திற்கு வராமல் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்புஇல்லை என்றும், எதிரிகள் மீது உருவாக்கப்பட்ட தவறான வழக்கு என்று சொன்னால் சரியல்ல. விஞ்ஞான வளர்ச்சியை எதிரிகள் மீது தவறாக பயன்படுத்தப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I.
Mannargudi.